விலை: சதம் 75

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

எம்மிடம்......
உள்ளூர், வெளியூர்
காப்பற் வகைகள் (Floor)
லொறிகளுக்கு
பொடி அடிக்கும்
(F) பிற்றிங்ஸ்........
மெழுகுசீலை வகைகள்
இன்னும் பல பொருட்கள்
நியாய விலையில் கிடைக்கும்.
H. ESMAILJEE & Co
71-73, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். போன்: 8016

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 ஆடி 9 ரம்ழான் 21 இதழ் 160
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 24-7-1981

ஒட்டுப் பலகைக்
கூட்டுத்தாபனம்
தொலைபேசி : 508
யாழ். விநியோகஸ்தர்கள்
ராம்சன்ஸ்
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
19, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

★ "கட்சியை தடைசெய்க; அமிரை தூக்கிலிடுக!"

# அரசாங்க எம்.பி.க்கள் சபையில் ஆக்ரோஷமாகக் கண்டனம்!

## கூட்டணி, சுதந்திரா, கம்யூ. கூட்டாக வெளிநடப்பு!

(நமது நிருபர் சு. மகாலிங்கசிவம்)

நேற்று நடைபெற்ற பாராளுமன்றக் கூட்டத்தில், எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் மீது, அரசு தரப்பு எம். பி. க்கள் ஆக்ரோஷமான முறையில் கண்டனம் தெரிவித்தனர்!

நாட்டுப் பிரிவினையைக் கோரும் அமிர்தலிங்கத்தை கழுது மரத்தில் ஏற்றவேண்டும் என்றும், "காலிமுகத்திடலில் தூக்கிலிட வேண்டும் என்றும்" கூறிய அரசு எம். பி.க்கள்; "திரு. அமிர்தலிங்கத்தை சுட்டுக் கொலை செய்யவேண்டும்" என்றும் குரல் எழுப்பினர்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் மீதான பிரேரணை மீது இன்று தொடர்ந்தும் விவாதம் நடைபெற்று வாக்கெடுப்பும் இன்று நடைபெறும்.

எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்தின் மீதான நம்பிக்கையில்லா பிரேரணை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது பலத்த கூச்சலும் வாதப்பிரதிவாதங்களும் இடம்பெற்றன.

எதிர்க்கட்சித்தலைவர் திரு. அமிர்தலிங்கம் எழுப்பிய ஒழுங்குப்பிரச்சினையும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் கொண்டுவந்த ஒழுங்குப் பிரச்சினையும் சபாநாயகர் ஜனாப் பக்கீர்மாக்காரால் நிராகரிக்கப்பட்டது.

இதன் காரணமாக எதிர்க்

[6 ம் பக்கம் பார்க்க]

## "அமிரை காலிமுகத்திடலில் தூக்கிலிட வேண்டும்" -நெவில்

### 'இந்தச் சபையில் என்னை நீங்கள் தூக்கிலிடலாம்'-'அமிர்'

[கொழும்பு]

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் நேற்று தன்னிலை விளக்கம் ஒன்று அளிக்க முற்பட்டபோது, பாணந்துறை பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் நெவில் பெர்னாண்டோ ஒரு கட்டத்தில் குறுக்கிட்டு, 'திரு. அமிர்தலிங்கத்தை காலிமுகத்திடலில் வைத்து தூக்கிலிட வேண்டும் என்றுகுறிப்பிட்டார்.

இதற்குப்பதிலளித்த எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், "காலிமுகத்திடலில் மாத்திரமல்ல நீங்கள் வேண்டுமானால் இந்தச் சபையிலும்கூட என்னைத் தூக்கிலிடலாம். ஆனால் எனக்கு சரி என்றுபட்டதை எங்கு வேண்டுமானாலும் கூறுவதற்கு நான் தயங்கமாட்டேன்" என்று கூறினார். [ம]

## "அமிரை வெடிவைத்து சுடவேண்டும்"

### சபையில் பிரதி அமைச்சர்

[கொழும்பு)

"தாய்நாட்டுக்குத் துரோகம் செய்யும் திரு. அமிர்தலிங்கத்தை வெடிவைத்துச் சுடவேண்டும்"

இவ்வாறு நெடுஞ் சாலைகள் பிரதி அமைச்சர் திரு. ஜி. எம். பிரேமச்சந்திரா நேற்று பாராளுமன்றத்தில் பேசுகையில் கூறினார்.

"திரு. அமிர்தலிங்கத்தின் கார், சிவப்புநிற ராஜதந்திர கடவுச்சீட்டு [பாஸ்போர்ட்]

[6ம் பக்கம் பார்க்க]

மேர்ச்சன்ட் பினன்ஸ் லிமிட்டெட்

தமது தலைமைச் செயலகத்தை யாழ்ப்பாணத்தில் ஸ்தாபித்துள்ள ஒரே ஒரு நிதி நிறுவனம்.

வருடமொன்றிற்கு ஆகக் கூடுதலான

27%

வட்டி வழங்குகின்றது

குறைந்தபட்ச வைப்புப்பணம் ரூபா 500/- மட்டுமே

ஏனைய விபரங்களுக்குத் தொடர்பு கொள்க:

தலைமைச் செயலகம்,

129, கோவில் வீதி யாழ்ப்பாணம் (தொலைபேசி: 8183)

## 'ஆலால்' தமிழில் சத்திய பிரமாணம்

### 'குட்டிப்புலி' என்று கூச்சல்

[கொழும்பு[

கோப்பாய்த் தொகுதியின் புதிய பாராளுமன்ற உறுப்பினர் திரு ஆ. மு ஆலாலசுந்தரம் நேற்று பாராளுமன்றத்தில் தமிழில் சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொண்டார்.

திரு ஆலாலசுந்தரம் சபாநாயகர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் எடுத்தபின்னர் எதிர்க்கட்சியிலுள்ள தமது ஆசனத்திற்குப் போகும்போது அரசாங்க பின்வரிசையிலிருந்து 'குட்டிப்புலி' என்று கூச்சல் கேட்டது.

திரு ஆலாலசுந்தரம் யாழ்ப்பாணம் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வெ யோகேஸ்வரனுக்கு அருகில் அமர்ந்தார் [ர]

மலிவுவிற்பனைக்கு

புதிய MF 240 உழவு இயந்திரம், பெட்டி, கலப்பை, ஒட்டோ மெற்றிக் கிச் ஆகியவற்றுடன் விற்பனைக்குண்டு.

ஸ்ரனிஸ்லொஸ்,

புனிதமரியாள் ஆலயம், அடம்பன்.

0411

**மணிவாக்கு**

நான் தேவசந்நிதானத்திலிருக்கிறேன் என்று கூடுமானவரை நினைக்கிறேன். அதுவே தூய்மையாய் இருக்கிறதற்கு நல்வழி

— யோக சுவாமிகள்

# நமது நோக்கு

## கலாசார திரிகோணம்

கண்டி, பொலன்னறுவை, அநுராதபுரம் என்ற மூன்று நகரங்களும் பௌத்த கலாச்சாரத் தன்மையைப் பெருமையாகக் கொள்ளப்படுகின்றன. இவை மூன்றும் பௌத்த கலாச்சாரத் திரிகோணமென்று கொள்ளப்படுகின்றன.

இதன் புராதன மகிமையைத் தக்கவாறு உலகுக்கெடுத்துரைக்கும் வகையில் சர்வதேச நிதிஉதவி கோரப்படுகின்றது. அதிநுட்ப பயிற்சிபெற்ற தொழில் வல்லுநர் ஆயிரக்கணக்கில், இம்மூன்று நிலையங்களிலும் இடிபாடுகட்டிட வேலைகளுக்குத் தேவைப்படுகின்றனர்.

இந்தத் தேசியப் பணிக்கு இன்று மேற்கு நாடுகளுக்கு விஜயம் செய்துகொண்டிருக்கும் பிரதமர் பிரேமதாசா திட்டங்களை விளக்கி நிதி உதவி கோரிவருகின்றார்.

கலாசாரரீதியில் பௌத்த மதமும் பண்பாடும் சர்வதேச புகழ்பெற்றவை. எனவே போதிய உதவிகிட்டும். நாட்டின் பெரும்பான்மையரான சிங்கள பௌத்த மக்கள் அரசின் பணியை மிகவும் மெச்சுவர்.

இதேபோன்று, ஒரு சிறு அளவிற்காவது, இந்துசமய கலாசார தேவைகளை அரசு கவனித்ததில்லை. அதற்கென ஒரு அமைச்சர் இருந்தும் போது அதனை நினைவூட்ட அவர் தவறமாட்டார்.

அமைச்சர் இராசதுரையின் கோரிக்கையில், வடக்கில் ஆறுமுகநாவலர் மணிமண்டபமும் கிழக்கில் விபுலாநந்த அடிகள் நினைவு மண்டபமும் தெற்கில் கதிர்காமத்தில் முன்னிருந்து யாத்திரிகர்கள் அனைவருக்கும் அரும்பணி புரிந்த இராமகிருஷ்ண மடம் கடந்த அரசால் அகற்றப்பட்டதற்காக பத்துலட்சம் ரூபா நஷ்டஈடு வழங்கவும் கோரிக்கையில் அமைச்சரவை ஏற்றுக்கொண்டிருக்கிறது.

இருபான்மை தேசிய இனமென தமிழினத்தை ஒப்புக்கொள்ளும் அரசு, தமிழர்களுக்கென ஒரு கலாசார திரிகோணத்தைக் கருத்திற்கொள்வது வரவேற்கத்தக்கது.

ஆனால் இதன் செயற்திட்டத்தில் ஒரு விபரீதம் உண்டாவதை நாம் கவனிக்க முடிகிறது.

கடந்த ஆட்சியில் யாழ்ப்பாணத்தில் ஆறுமுகநாவலர் மணிமண்டபம் எழுப்புவதற்கு பல ஆயத்தங்கள் துரிதமாக நடைபெற்றன. சற்றில் அவையெல்லாம் புகைபோல் மறைந்தன. கதிர்காம இராமகிருஷ்ண மடத்தின் பெயரால் நஷ்டஈடு 10 லட்சம் ரூபா வழங்குவதாக ஜனாதிபதி ஜெயவர்த்தன மிக உருக்கத்துடன், இராமகிருஷ்ண மிஷன் பொன்விழா வில் கடந்த வருட இறுதியில் பகிரங்கமாகக் கூறியிருந்தார். கதிர்காமம் இந்துக்கள் கையிலிருந்து பறிபோன கதை பழங்கதையாகின்றது.

இவற்றைக் கவனித்தால் தனிச்சிங்களச்சட்டம் போல, தனிப் பௌத்தம் என்பதுதான் அரசின் மதக்கொள்கையோ வென தமிழ்மக்கள் அஞ்சுவது இயல்பு; ஆனால் அது சாத்தியமல்ல. எதனையும் சீரணிக்கவல்ல திறமை இந்து மதத்தின் தனிப்பெருமை.

இவ்விதமான அரசியல், சமூக, சமுதாய கொள்கைகளிலும் திட்டங்களிலும் பின்பார்வையும் அவசியமாகின்றது. கடந்தகாலத்தை மறத்தல்கூடாது. ஆனால் அதற்கென்று நாம் கட்டியழவும் கூடாது.

இந்துமதம், கலாசாரம் பரந்துபட்டது. அதற்கு அபாயம் என்றுமே இல்லை. வாய்மை ஒன்று; தர்மம் ஒன்று; கடவுள் ஒன்று. இந்த முக்கோணத்திலே அமைவதுதான் இந்துசமயமும் பண்பாடும்.

இன்று வாக்குவாதங்கள் பல; தர்க்கங்கள் பல; கட்சிகள் பல. தம் மதமே எம்மதத்திலும் சிறந்தது என்ற மதம்பிடித்தவர் இருக்கும்வரைக்கும் தெய்வ சிந்தனைக்கு இழுக்குதானே நேரிடும். தம் மொழியே எம்மொழியிலும் சிறந்தது என்று நினைப்பவர், பல மொழிகொண்ட சமுதாயத்தைச் சீர்குலைக்கும் திறமையுடையவர்.

நற்செயல்களே புரிந்து தெய்வம் என்பதில்லை என்பார் எத்தனை பேர் மேன்மையுடையராவர்கள்? இவர்களுக்கும் இந்துமதத்தில் இடமுண்டு.

தமிழ் மொழியே ஆதிமொழியென்றும், தமிழ் கலாசாரம் - இந்துகலாசாரம் மிகத்தொன்மையானதென்றும் ஆராய்ச்சிகள் நிரூபித்திருக்கும் நிலையில் கலாசார திரிகோணங்களில் வேற்றுமைகாண்பதோ, காட்டுவதோ விவேகமன்று.

"மா.அ. சபையின்

## கல்விக் கொள்கை தெரிந்த பின்னரே உதவி செய்யலாம்"

**— மானிப்பாய் எம். பி.**

(யாழ்ப்பாணம்)

"மாவட்ட அபிவிருத்திசபையின் கல்விக் கொள்கை இன்னமும் திட்டவட்டமாகத் தெரியாமலிருப்பதால், பாடசாலைகள் அபிவிருத்தி குறித்து எதுவும் செய்ய முடியாமலிருக்கிறது."

மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம், இணுவில் அமெரிக்கமிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெற்ற விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ச. தனஞ்சயன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு தர்மலிங்கம் தொடர்ந்து பேசுகையில், "மாவட்ட அபிவிருத்திசபையின் கல்விப்பகுதிக்கு, முழு நிர்வாகமுமோ அல்லது கட்டிடப்பகுதி மட்டுமோ உள்ளடங்கியதாகத் தெரியவில்லை.

இவை தெரிந்த பின்னர்தான், பாடசாலைகளுக்குத் தேவையான உதவிகளை நாங்கள் செய்யமுடியும்" என்றார். (மா-அ)

மாவட்டசபைகளின் எதிர்காலம்

# காலம்தான்

## பதில் கூறவேண்டும்

மாவட்ட அபிவிருத்தி சபைகள் நாடுமுழுவதும் இயங்கத்தொடங்கியுள்ளன.

நாட்டுப் பிரிவினை கோரும் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் இவ்வபிவிருத்தி சபைகள் தொடர்பாக அதன் சகல நிலைகளிலும் தங்களது ஆதரவையும் பங்களிப்பையும் அளித்துவந்திருக்கிறார்கள்.

திரு எஸ். டபிள்யு ஆர். டி. பண்டாரநாயக்காவுடன் பிரதேச சபைகள் பற்றியும் திரு. டட்லி சேனநாயக்காவுடன் மாவட்ட சபைகள் பற்றியும் பேச்சுவார்த்தை நடத்தி, ஒப்பந்தம் எழுதி பின்னர் அவ்வொப்பந்தங்கள் கிழித்தெறியப்பட்டது 'சரித்திரம்'.

அப்போது சமஷ்டி கொள்கையைக் கொண்டிருந்தார் திரு எஸ் ஜே வி செல்வநாயகம் தனக்கும் இவ்விரு பிரதமர்களுக்குமிடையே செய்யப்பட்ட இவ்வொப்பந்தங்கள் தன்னை அறியாமலேயே அவர்களால் கிழித்தெறியப்பட்டதாக திரு செல்வநாயகம் கூறினார். இதன்பின்னர் உருவாகிய தமிழர் கூட்டணியின் மூலம் "தனிநாடு" கோரிக்கையை திரு செல்வநாயகம் முன்வைத்தார். 1976ம்ஆண்டு வரவு—செலவுத் திட்ட விவாதத்தில் திரு செல்வநாயகம் ஆற்றிய உரை மிகவும் முக்கியமானது. அதுதான் பாராளுமன்றத்தில் அவரது கடைசி அரசியல் பேச்சாகவும் இருந்தது.

தமிழ்மக்களின் நியாயபூர்வமான உரிமைகளுக்காக சிங்களமக்களின் செல்வாக்கைப் பெருமளவில் பெற்றிருந்த இருபிரதமர்களுடனும் தாம் மேற்கொண்ட சமாதான முயற்சிகளையும் அவை நிராகரிக்கப்பட்ட விதத்தையும் அடுத்தடுத்த சிந்தனைகளையும், தனிநாடு கோரிக்கையின் நிர்ப்பந்தத்தையும், அது அவ்வளவு சுலபமானதல்ல என்பதையும் அதில் எதிர்நோக்க நேரும் கஷ்டங்களையும் ஆனாலும் அதைத்தவிர வேறுவழி இல்லை என்பதனையும் வெகு துல்லியமாக அவர் அன்று பாராளுமன்றத்தில் விளக்கினார். தன்னுடைய பேச்சின் இறுதியில் "தமிழினம் உரிமை பெற்ற இனமாக வாழவேண்டும், அல்லது செத்துமடியவேண்டும்" என்றார் அவர்.

- மாலி -

திரு செல்வநாயகத்தின் இந்த உரையை வெகு அவதானமாக செவிமடுத்துக் கொண்டிருந்தவர் அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த திரு ஜே ஆர் ஜயவர்த்தன.

இப்போது தனிநாடு கோரிக்கை எழுப்பப்பட்டுள்ளவேளையில் அதுவும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் வரவேற்புடன் மாவட்ட அபிவிருத்திசபைகளை ஜனாதிபதி திரு ஜே ஆர் ஜயவர்த்தன உருவாக்கியிருக்கிறார். அவை செயல்படவும் ஆரம்பித்திருக்கின்றன.

சட்டவாக்கம் எப்படியிருந்தபோதும் உண்மையில் இம் மாவட்டசபைகளின் தாற்பரியத்தை நடைமுறையில் — காலப்போக்கில்தான் தெரிந்துகொள்ளமுடியும். பன்முகப்படுத்தல் என்ற போர்வையில் அதிகாரம் ஜனாதிபதியிடம் இச்சபைகள்மூலம் குவிக்கப்படுகின்றன என்று விமர்சிப்பவர்களும் இருக்கிறார்கள். ஆனால் எது எப்படியிருப்பினும் இம்மாவட்ட அபிவிருத்தி சபைகள் ஜே ஆரின் அரசியல் சாணக்கியமேதான்!

இச்சபைகள் தொடர்பாக சிறீலங்கா சுதந்திரக்கட்சி எதிர்ப்புத்தெரிவித்ததோடு நாட்டைப் பிரிக்கும் நடவடிக்கை இது என்று தென்னிலங்கையில் பிரசாரமும் செய்தது. அபிவிருத்திசபைத் தேர்தல்களில் அக்கட்சி பங்குபற்றவும் இல்லை. நாம் ஆட்சிக்கு வந்ததும் இச்சபைகளைக் கலைப்போம் என்று திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா மட்டக்களப்பில் தமக்களிக்கப்பட்ட டகிரங்க வரவேற்பில் குறிப்பிட்டிருக்கிறார்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் அம்பாறை தவிர்ந்த ஏனைய மாவட்டங்களின் அதிகாரத்தை தமிழர் விடுதலைக் கூட்டணி கைப்பற்றியிருக்கின்றது. யார் அதிகாரத்தைக் கைப்பற்றினாலும் அரசாங்கத்தின் திட்டங்கள்தான் நிறைவேற்றப்படும் என்று அமைச்சர் திரு. தேவநாயகம் கூறுகிறார். இதற்கிடையில் திரு. அமிர்தலிங்கம் உபகுழுவின் தலைவர் திரு டேவிட் ஹெறப்புடன் நடத்திய பேச்சுவார்த்தை பற்றி அரசாங்கமே பிரச்சனையைக் கிளப்பியிருக்கிறது.

பிரான்ஸின் கோரும் நீங்கள் இச்சபைகளை எப்படி ஆதரித்தீர்கள்? என்று கூட்டணியினரிடம் கேட்டார்.

ஒற்றுமையாக வாழ இனி இடமில்லை, காணியைப் பிரித்துத்தான் ஆகவேண்டும். காணி வழக்குத்தீர பலவருடமாகும். அதுவரை சும்மா பார்த்திருக்க முடியாது. எமக்குரிய பாகத்தில் வேண்டியவற்றைக் கட்ட வேண்டியவற்றை நாட்டி, வேண்டியவற்றை விளைவிப்போம் வழக்குத்தீரும்போது எல்லைகளில் கதியால்களைப் பிடுங்கிவிட்டு மதிலை அப்போது கட்டுவோம். இப்படி இருக்கிறது அவர்களின் பதில். எனவே இச்சபைகள்பற்றி காலந்தான் பதில் சொல்ல வேண்டும்.

**மக்கள் கருத்து**

### யாழ். நகரில் தீயணைக்கும் படை நிறுவுக

யாழ்நகரில் அடிக்கடி ஏற்படும் தீ வைப்புச் சம்பவத்தால் பல கடைகளும் அண்மையில் நிகழ்ந்த தீவைப்புச் சம்பவத்தால் பெறுமதி வாய்ந்த "யாழ். நூல்நிலையமும்" தினசரிப் பத்திரிகையான "ஈழநாடு" தீக்கிரையாகியுள்ளன. தீச் சம்பவங்கள் ஏற்பட்ட உடனே அணைப்பதற்கு வேண்டிய ஆயத்தங்கள் எடுப்பதற்கிடையில் 'தீ' தனது ஆதிக்கத்தை பரவலாக்கி விடுகிறது.

இலங்கையின் இரண்டாவது பெரிய நகரமான யாழ்ப்பாணத்தில் தீயணைக்கும் படை அவசியமும் அவசரமானதும் என்று பலரும் பத்திரிகை வாயிலாக ஏற்கனவே தெரிவித்திருந்தும்கூட எவ்வித பலனும் ஏற்படவில்லை. இன்றுவரை தீயணைக்கும் படைப்பிரிவொன்றை யாழ்.நகரில் நிறுவ அரசோ அன்றி மாநகர சபையோ முன்வராதது ஏனோ தானோ என்ற மனப்பான்மையில் இருப்பது கவலைதரும் விஷயமாகும்.

எங்கள் எம். பி.க்கள் இதில் கவனம் செலுத்தி 'தீயணைக்கும்' படை யாழ்நகரில் நிறுவத் தாமதமின்றி நடவடிக்கை எடுக்கவேண்டும். யாழ் அபிவிருத்தி சபையும் இது குறித்து கவனம் செலுத்துமா?

'குரு'

அராலி தெற்கு.

"மலையகத்திலும்

## வன்செயல்கள் இடம் பெறாது என்பதற்கு என்ன உத்தரவாதம்?"

(ஹட்டன்)

"இனவாதமும், அரச பயங்கரவாதமும் கடந்த நான்கு ஆண்டுகளிலும் இடம் பெற்றுள்ளன. அண்மையில் கூட வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கட்டவிழ்த்துவிடப்பட்ட இனவாத வன்செயல் சம்பவங்கள் எதிர்காலத்தில் மலையகத்திலும் நடைபெறமாட்டாது என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் கிடையாது. ஆதலால் இனவாத வன்செயல்களையும், அரச பயங்கரவாதத்தையும் எதிர்ப்பதற்கு மக்கள் தேசிய ரீதியில் புரட்சிகர அரசியல்பாதையில் அணி திரள்வது அவசியமாகும்."

மேற்கண்டவாறு ஹட்டன் செட்டித் மண்டபத்தில் இலங்கை தேசபக்த வாலிபர் இயக்கத்தின் மலையகக் கமிட்டி நடத்திய பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய இடது கம்யூனிஸ் கட்சிப் பிரமுகர் திரு. கே செந்திவேல் கூறினார்.

திரு வி. விஜயரத்தினம் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் செந்திவேல் தொடர்ந்தும் பேசுகையில், "இன்றைய அரசாங்கத்தில் தோட்டத் தொழிலாளர்களைப் பெரும் எண்ணிக்கையாகக்கொண்ட இரு பெரும் தொழிற் சங்கங்கள் அங்கம் வகிக்கின்றன. அதன் தலைவர்கள் அமைச்சர்களாகவும் உள்ளனர். ஆனால் தோட்டத் தொழிலாளர்களின் நீண்ட

(4ம் பக்கம் பார்க்க)

## பேய்ச்சி எனும் அம்மன்

(யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டு அருள்மிகு ஸ்ரீ ராஜராஜேஸ்வரி (பேய்ச்சியம்பாள்) ஆலய வருடாந்த மகோற்சவ கொடியேற்றம் இன்று)

பேய்ச்சி எனும் அம்மன் - எமைப்
பேசவைக்கும் அன்னை - உயிர்
மூச்சதனை இயங்கவைக்கும் மகா
சக்தியவள் தாள் பணிவோம் (பேய்ச்சி...)

அரசமர நிழலிலே அழகாய் வீற்றிருந்து
சரவணபவனும் வள்ளித் தெய்வானைத்
தேவியரும்
வைரவ விநாயகரும் சூழ்ந்திருக்க அன்னையவள்
துரவடியில் கோயில்கொண்டாள்
துன்பந் தீர்த்திடவே.

- நாயன்மார்கட்டு ப மகேந்திரதாசன்

## 'ஆலால்' வாழ்க்கை சுருக்கம்

கோப்பாய்தொகுதியி லிருந்து பாராளுமன்ற உறுப்பினராக நேற்று பாராளுமன்றத்தில் சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொண்ட திரு மு. ஆலாலசுந்தரம் [45 வயது]. ஒரு 'ஆல்' ரவுண்டராகும்''

இவர் ஒரு பிரபல சட்டத்தரணி மட்டுமல்ல கவிஞர், எழுத்தாளர், நாடக ஆசிரியர், சிறந்த மேடை பேச்சாளர் அத்துடன் தொழிற் சங்கவாதியும்கூட. இவர் நல்லூர்த் தொகுதியிலுள்ள கல்வியங்காட்டில் 1936ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதலாம் திகதி பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை நல்லூர் செங்குந்தா இந்துக்கல்லூரியிலும், அதன் பின்னர் யாழ். ஸ்டான்லிக் கல்லூரியிலும் கல்வி பயின்றார். இவர் உயர் கல்விக்காக தமிழ் நாடு சென்று சென்னை பல்கலைக்கழக மாநிலக்கல்லூரியில் கல்வி கற்று பி. ஏ. பரீட்சையில் சித்தியடைந்தார்.

1960ம் ஆண்டு தாயகம் திரும்பி இலங்கை சட்டக்கல்லூரியில்சட்டம்பயின்று1965ம் ஆண்டு 'அப்புக்காத்து' பரீட்சையில் சித்தியடைந்தார்.

1949ம் ஆண்டு 13வயது சிறுவனாக இருந்த காலத்திலிருந்து இலங்கைத் தமிழரசுக் கட்சியில் ஈடுபாடு உடையவராக விளங்கிய 'ஆலால்' "கோப்பாய் கோமான்' அமரர் வன்னியசிங்கத்தின் மூலம் தமிழரசு கட்சியின் மேடைப் பிரசங்கியாக அறிமுகப்படுத்தப்பட்டார்.

இதன் பயனாக 1961ம் ஆண்டு வடகிழக்கு மாகாணங்களில் நடைபெற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்தில்கலந்து கொண்ட இவர் 1962 - 1965 வரை தமிழரசு வாலிப முன்னணியின் பொதுச் செயலாளராகவும் கடமையாற்றினர்.

1966ம் ஆண்டு தொடக்கம் இலங்கை தமிழரசுக் கட்சியின் உதவிச் செயலாளராகவும் இலங்கை பஸ் தொழிலாளர் கழகப் பொதுச் செயலாளராகவும் இருந்து வருகிறர்.

''தமிழன் கதை'' ''சங்கிலியன் நாடகம்'' போன்றவை இவர் எழுதிய தேர்தல் பிரசார நாடகங்களாகும்.

கிளிநொச்சி தொகுதியில் 1970ம் ஆண்டு பொதுத்தேர்தலில் தமிழரசு வேட்பாளராக போட்டியிட்டு மிகவும் குறைந்த வாக்குகளால் வெற்றி வாய்ப்பை இழந்தவர் இவர்.

1972ம் ஆண்டு தொடக்கம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தொழில் உறவு செயலாளராக கடமையாற்றி வரும் திரு ஆலாலசுந்தரம் தமிழர் விடுதலை கூட்டணி நடத்திய சட்டமறுப்புப் போராட்டங்கள் வடபகுதிக்கு வருகைதரும் அமைச்சர்களுக்கு கறுப்புக் கொடி காட்டுதல் போன்ற பல்வேறு போராட்டங்களில் முன்னணியில் நின்று கலந்து கொண்டவர். 1978-1979 வரை வடபிராந்திய போக்குவரத்துச்சபை இயக்குநர் பதவியையும் வகித்தவர் இவர்.

1979ம் ஆண்டு தொடக்கம் யாழ்ப்பாண ப. நோ. கூ. சங்கத் தலைவராகவும் 1980ல் இருந்து வடபகுதி தேசிய கூட்டுறவுச் சபைத்தலைவராகவும் ஆலாலசுந்தரம் கடமையாற்றி வருகிறார். [நி]



## அமிரை---

[1ம் பக்கத் தொடர்ச்சி

மற்றும் அவரது பாராளுமன்ற உரிமைகள் அத்தனையும் பறித்து, அவரை சாதாரண அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கமாக மாற்ற வேண்டும். இவரது கட்சியை தடைசெய்ய வேண்டும், இவருக்கு தேசத் துரோகத்தண்டனை வழங்க வேண்டும்.

''ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி திருடர்களைப்பின்பற்றி, இனத் துரோக கட்சியாகிவிட்டது. சிங்கள மக்கள் ஒன்றுக வேண்டும்.

''நாம் யுத்தத்துக்கு புறப்பட்டால், கொழும்பில் ஒரு தமிழ்க்குடும்பமும் இருக்க முடியாது. ஆனல் அப்படி நாங்கள் செய்யமாட்டோம்''

''திரு. அமிர்தலிங்கம் விடும் தவறினல் தமிழ் மக்கள் பல கஷ்டங்களை ஏற்கவேண்டி வரும் இவற்றை தமிழ் மக்களே பொறுப்பேற்க வேண்டும்.''

[ம]

## அரசாங்க---

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கட்சியினர் அனைவரும் சபையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.

### 'அமிர்' எழுந்ததும் சபையில் கூச்சல்

சபை நேற்றுக் கூடியதும், அரசாங்க அலுவல்களின் பின்னர் நிதியமைச்சர் திரு. ரொனி டிமெல் தமது வெளிநாட்டு விஜயம்பற்றிய விளக்கம் ஒன்றை சபையில் விடுத்தார். இதனையடுத்து எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் எழுந்து தன்னிலை விளக்கம் ஒன்றை விடுக்கப்போவதாகத் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து சபையில் பலத்த கூச்சல் எழுந்தது.

கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் திரு. சிறில் மத்தியூவும் பாணந்துறை எம். பி. டாக்டர் நெவில் பெர்னாண்டோவும் அவரை பேச அனுமதிக்க முடியாது என்று குரல் எழுப்பினர்கள். பலத்த கூச்சல் எழுந்தது.

### அமிர் கொடுத்த விளக்கம்

இதன் மத்தியில் திரு அமிர்தலிங்கம் சபாநாயகரைப்பார்த்துப் பேசுகையில் ''ஏற்கனவே உங்களுக்கு இதுவிடயமாககடிதம் எழுதியிருந்தேன் தங்களின் அறையிலும் சந்தித்துப் பேசியிருக்கிறேன். நான் நாட்டில் இல்லாத வேளையில் என்னைப்பற்றி இந்தச்சபையிலேயே பேசப்பட்டுள்ளது.

எனவே இதுபற்றி தனிப்பட்ட முறையில் விளக்கம் ஒன்று அளிக்க எனக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படவேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார்.

சபாநாயகர்: ''நீங்கள் என்ன செய்ய முயலுகிறீர்கள்''

திரு. அமிர்தலிங்கம்: ''முதலில் நான் சொல்வதைக் கவனித்துக்கேளுங்கள். பின்னர் சபையின் நிரந்தர ஒழுங்கு விதிகளின்படி தனிப்பட்ட முறையில் விளக்கம் ஒன்றை அளிக்க விரும்புகின்றேன்''.

இச்சமயத்தில் சபாநாயகருக்கும் திரு. அமிர்தலிங்கத்துக்குமிடையில் சில நிமிடங்கள் வாக்குவாதம் நடந்தது.

### நீங்கள் உங்கள் வேலையைபாருங்கள்

இதற்கிடையில் நல்லூர் எம். பி. திரு. சிவசிதம்பரம் ஏதோ சொல்ல நீங்கள் உங்கள் வேலையைப்பாருங்கள் என்று சபாநாயகர் குறிப்பிட்டார்.

திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து தம்மீதானநம்பிக்கையில்லாபிரேரணை மீது ஒன்றும் பேசப்போவதில்லையென்றும் தாம் நாட்டில் இல்லாத வேளையில் தம்மைப்பற்றி பேசப்பட்ட விடயங்கள் குறித்தே விளக்கமளிக்கப் போவதாகவும் கூறினர்.

சபாநாயகர் அதற்கு ''உங்களுக்கு எதிராக ஒரு பிரேரணை இருக்கின்றது. நீங்கள் தனிப்பட்ட விளக்கம் அளிக்க விரும்பினல் எனது அறையில் வந்து என்னைப்பார்க்கலாம்'' என்றார்.

திரு. அமிர்தலிங்கம் பதிலளிக்கும்போது ''உங்களை முன்னர் சந்தித்து இதுபற்றி பேசியிருக்கிறேன். நான் நாட்டுக்குத் திரும்பிய பின்னர் சபையில் பேசும் முதல் சந்தர்ப்பம் இதுவாகும். எனவே இப்பொழுது இந்த விளக்கம் அளிக்கும் சந்தர்ப்பத்தை வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இப்போதும் சபையில் பலத்த கூச்சல்கள் எழுந்தன.

### சபைக்கு யார்தலைமை?

திரு. அமிர்தலிங்கம்; ''இந்த சபையில் எல்லாரும் பேசுகிறார்கள் யார் தலைமை வகிப்பவர்?'' என்று கேட்டார்.

டாக்டர் நெவில் பெர்ணண்டோ. 'இவர் ஒரு பொய்யர், கொலைகாரர், துரோகி...' என்று கூறவே, திரு. அமிர்தலிங்கம் அதனை வாபஸ் வாங்குமாறு வற்புறுத்தினர்.

டாக்டர் நெவில் பெர்ணண்டோ தாம் கூறியதை நிரூபிப்பதாகக் கூறினர். [அமிர்தலிங்கத்தை] காலிமுகத்திடலில் தூக்கிலிட வேண்டும் என்றும் டாக்டர் நெவில் பெர்ணண்டோ சொன்னர்.

திரு. அமிர்தலிங்கம். 'என்னை காலிமுகத்திடலிலும் தூக்கிலிடலாம், இந்தச் சபையிலும் தூக்கிலிடலாம். ஆனல் எனக்குச்சரியென்று பட்டதை எந்த இடத்திலும் எடுத்துக் கூறநான் தயங்கப் போவதில்லை' என்றார். இந்தக்கட்டத்திலும் பலத்த கூச்சல் எழுந்தது.

### ஒத்துழைப்பு வேண்டும்

சபாநாயகர் அரசாங்கத்தரப்பினரைப் பார்த்து, நானும் அரசாங்கக்கட்சியைச் சேர்ந்தவன் தான், சபை ஒழுங்காக நடக்க உறுப்பினர்கள் ஒத்துழைப்புத்தரவேண்டும் என்று குறிப்பிட்டார்.

திரு அமிர்தலிங்கம், பாணந்துறை உறுப்பினர் தம்மைப்பற்றி கூறியவற்றை வாபஸ் பெறவேண்டும் என்று வற்புறுத்தினர்.

டாக்டர் நெவில் பெர்ணண்டோ: 'அவர் துரோகியாக இல்லாவிட்டால் வாபஸ் பெறுகிறேன்'

அமிர்தலிங்கம்: 'நிபந்தனையின்றி வாபஸ் பெறவேண்டும்' என வற்புறுத்தவே பாணந்துறை எம். பி. தமது தமது கூற்றைவாபஸ் பெற்றார்.

இதன் பின்னர் திரு. அமிர்தலிங்கம் நாடாளுமன்ற நடைமுறைகள் பற்றி 'எஸ்கின்மோ' என்பவர் எழுதிய நூலில் இருந்து சில பகுதிகளை வாசிக்க ஆரம்பித்தார்.

இந்தக்கட்டத்தில், இந்தச் சபைக்கென நடைமுறைவசதிகள் இருக்கின்றன அவைகளின் படியே சபை நடக்கவேண்டும். இது ஒன்றும் தேவையில்லை' என்று அரசாங்கத் தரப்பினர் கூச்சலிட்டனர்.

சபாநாயகர்: திரு. அமிர்தலிங்கத்தின் கோரிக்கையை நிராகரித்து, விவாதத்தில் கலந்துகொண்டு பதிலளிக்கும்படி கேட்டுக்கொண்டார்.

### சபையைவிட்டு வெளியேறினர்

இதைத் தொடர்ந்து காலை 11-20 மணிக்கு திரு. அமிர்தலிங்கம் சபையைவிட்டுவெளியேறவே, தமிழர்விடுதலைக்கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அவரைப் பின்தொடர்ந்தனர்.

இதன் பின் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் திரு. மைத்திரிபால சேனநாயக்கா ஒழுங்குப் பிரச்னையொன்றைக் கிளப்ப எழுந்தார்.

### ''சிங்களப் புலி''

'சிங்களப் புலி' என்று அரசதரப்பிலிருந்து குரல் கேட்டது.

திரு. மைத்திரிபால சேனநாயக்கா பேசுகையில்; ''இந்தப் பிரேரணை இச்சபையின் அதிகாரத்துக்கு அப்பாற்பட்டது. எதிர்க்கட்சித் தலைவர் பதவி சம்பிரதாயப் பூர்வமானவொன்றே. எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் அரசாங்கக் கட்சிக்கு அவர் விசுவாசமாக இருக்கவேண்டுமென்பதில்லை. எதிர்க்கட்சிகளின் விசுவாசத்தைதத்தான் அவர் பெற்றிருக்க வேண்டும். 1937 டிசம்பர் மாதம் 13-ம் திகதி சேர் இளமன் அட்லி பிரபு எதிர்க்கட்சித்தலைவராகஇருந்த போது அவருக்கு எதிராக காமன்ஸ் சபையில் ஒரு பிரேரணை கொண்டுவரப்பட்டதாக பத்திரிகைகளில் காணப்பட்டது. அவர் தன் நிலை பற்றி விளக்கம் அளித்ததைத் தொடர்ந்து அப்பிரேரணை கைவிடப்பட்டது. இந்தப் பிரேரணை ஒழுங்காக இல்லை. எனவே இதனை நிராகரிக்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

### சுதந்திராவும்

இதையடுத்து முற்பகல் 11-30 மணிக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரும் சரத் முத்தெட்டுவேகமயும் வெளிநடப்புச் செய்தனர். [ம]

சுன்னுகத்தில்

# மார்க்கட் கடை தீக்கிரையானது!

]யாழ்ப்பாணம்]

சுன்னுகம் மார்க்கட்டிலுள்ள கடையொன்று நேற்று அதிகாலை தீக்கிரையானது. இதனுல் மற்றைய கடைக்காரர்கள் மத்தியில் பதட்ட நிலை ஏற்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை சுமார் 3-30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

தீக்கிரையான கடைக் கட்டடம் சுன்னுகம் பட்டினசபைக்குச் சொந்தமானது. புங்குடுதீவைச் சேர்ந்த கந்தையா சபாரத்தினம் இக் கடையில் வியாபாரம் செய்துவந்தார்.

நேற்று முன்தினம் மாலை 6 மணிக்கு இவர் கடையைப் பூட்டிவிட்டு, சுன்னுகத்தில் உள்ள தமது வீட்டுக்குச் சென்றதாகவும் அதிகாலை 3-30க்கு கடை எரிவதாகத் தனது மகன் முறையானவர் செல்லையா தியாகராசா தெரிவித்ததைத் தொடர்ந்து தான் சென்று பார்த்தபொழுது தனது கடை எரிந்த நிலையில் காணப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

சுன்னுகம் சப் - இன்ஸ்பெக்டர் சிவராசா தலைமையிலான பொலிஸ் கோஷ்டி புலன் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். [மா]


## மரண அறிவித்தல்

### வே. சின்னத்துரை ஆசிரியர்

நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த யாழ். பெரியபுலப் பாடசாலை இளைப்பாறிய ஆசிரியரும் காலஞ்சென்ற லட்சுமியின் அன்புக் கணவரும் தவரஞ்சினியின் தந்தையும், தங்கராசா சிங்கத்தின் மாமனுரும், இராசரெட்ணம், இராசையா, கனகரத்தினம் ஆகியோரின் சகோதரரும், நாகமணியின் பேரனும் ஆவார். அன்னாரது பூதவுடல் 636 காங்கேசன் துறை இல்லத்தில் இருந்து தகனக்கிரிகைக்காக 24-7-81 [இன்று] வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், நண்பர்கள் ஆகியோர் ஏற்றுக்கொள்ளவும். 0423



### பயிற்சி

றேடியோ - டெலிவிசன்' ஏயர்கொண்டிசனிங், வெல்டிங் மூன்றுமாத டிப்பிளோமா பயிற்சிகள்- மற்றும் P. M. G. [Radio Officer] பயிற்சி ஆகியன ஆரம்பம் 2-8-81 அணுகவும் சேரலாம். நாஷனல் அக்கடமி, மொம்சாக்கட்டிடம், 11, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். 0422



எம்மிடம்...... இறக்குமதிசெய்யப்பட்ட

றெக்சின் குளோத்
பிளாஸ்டிக் குளோத்
(F) போமிக்கா சீற்
பொலித்தீன் வகைகள்
ஒட்டுப்பசை வகைகள்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெறலாம்.

**எச். இஸ்மாலிஜி அன் கோ**

71-73, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். போன்: 8016


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி 803ம் இலக்கத்திலுள்ள சுலாநிதிய அச்சகத்தில்
1981ம் ஆண்டு ஜூலை மாதம் 24-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office SrLanka
Regd No. QB 100286/81, P. O. Box 49, Jaffna. தொலைபேசி 7707, 389, 8126